17.02.2026

அ.வ.எண். 4/2018

பி.சா.3 – திரு. ராம்கி, த/பெ. சேட்டு (உதவி மின் பொறியாளர்)

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 17.02.2026 is accordance with the provision of Act X of 3331

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் 2018 ம் ஆண்டு முதல் சென்னியாண்டவர் கோவில் மின் வாரியத்தில் பணியாற்றி வருகிறேன். எனது அலுவலக SC.எண்.293-005-2075 யார் பெயரில் உள்ளது என்றால் N.சக்திவேல் பெயரில் உள்ளது. நான் சக்திவேலின் Service connection Sanction Format மற்றும் அதன் தொடர்புடைய விண்ணப்பம் மற்றும் இதர ஆவணங்களின் நகல்களை கொண்டு வந்துள்ளேன். **05.06.2024 தேதியிட்ட N.சக்திவேலின் Service connection Sanction Format மற்றும் அதன் தொடர்புடைய விண்ணப்பம் மற்றும் இதர ஆவணங்களின் நகல் வா.சா-ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. சக்திவேல் மின் இணைப்பு வேண்டி எப்போது மனு கொடுத்தார் என்றால் 27.05.2024 ல் ஆன்லைன் மூலமாக மனு கொடுத்தார். மேற்படி மனுவுடன் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்திருந்தார் என்றால் வருவாய் துறை ஆவணம், நஞ்சப்பன் மற்றும் ராமாத்தாள் இறப்பு சான்றிதழ், பாப்பாத்தி, கலாமணி, சென்னியப்பன் கொடுத்த ஆட்சேபணையின்மை கடிதம் கொடுத்துள்ளனர். பாப்பாத்தி, கலாமணி, சென்னியப்பன் மற்றும் சக்திவேல் பெயரில் உள்ள உரிமை மூல ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளனரா என்றால் 15.09.1979 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் தாக்கல் செய்துள்ளனர்.

3. மின் இணைப்பு கொடுத்த சொத்தில் வழக்கு இருப்பதாக பிரதிவாதி சக்திவேல் வகையறா சொன்னார்களா என்றால் இல்லை. 1979 முதல் 2024 ஆண்டு வரையிலான வில்லங்க சான்றிதழ் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. நஞ்சப்பனின் வாரிசுகள், வாதிக்கு தாவா சொத்தை கிரயம் கொடுத்தனர் என்றும், வழக்கு நிலுவையில் உள்ளது தெரியாமல் பிரதிவாதிக்கு மின் இணைப்பு

வழங்கப்பட்டது என்றால் வழக்கு இருப்பது தெரியாது. நஞ்சப்பனின் வாரிசுகள், வாதிக்கு தாவா சொத்தை கிரயம் கொடுத்தனரா என்று தெரியாது. மின் இணைப்பு கொடுப்பதற்கு முன்பாக மேற்படி வில்லங்க சான்றிதழ் வாங்கி பார்த்திருந்தால் வாதிக்கு கிரயம் கொடுத்திருப்பது தெரிந்திருக்கும் என்றும் உரிய முறையில் விசாரணை செய்யாமல் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

4. வழக்கு நிலுவையில் இருக்கும்போது, மின் இணைப்பு கொடுத்தது சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றும், மேற்படி மின் இணைப்பை ரத்து செய்வதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது என்றால் நீதிமன்ற உத்தரவின் பெயரில் ரத்து செய்யலாம்.

**1 முதல் 3, 5 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

குறுக்குவிசாரணைக்கு வேண்டி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur